**இளஞ்செழியன் – வெற்றிக்கதை**



என் பெயர் இளஞ்செழியன், 48 வயது விவசாய குடும்பத்தை சேர்ந்தவன். எனக்கு 5 ஏக்கர் நன்செய் நிலமும் 2.50 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. அதில் நெல், தென்னை போன்ற பயிர்களை பயிர் செய்து வருகிறேன். தென்னை 120 மரங்கள் உள்ளன.விளை வித்த ேங்காய்களை மயிலாடுதுறை, கும்பகோணம் தேங்காய் வியாபாரிகள் சொல்லும் விலைக்கு இது வரை விற்று வந்தேன். கும்பகோணம் மார்கெட் பகுப்பாய்வாளர் மூலம் தினசரி நிலவரங்களை தரும் எஸ்.எம்.எஸ் சேவையை அறிந்து எண்னையும் பதிவு செய்து கொண்டேன்.

கும்பகோணம் மற்றும் திருச்சி சந்தை நிலவரங்களை அன்றாடம் அறிந்து வருகிறேன்.தினசரி விலை என்ன என்று நான் தெரிந்து கொள்வதே எனக்கு சிரமமாக இருந்தது. இதற்கு முன்பு அக்கம் பக்கத்து விவசாயிகளுக்கு உள்ள கொள்முதல் விலையை கேட்டு தெரிந்து கொள்வேன். தற்போது அந்த பிரச்சனை இல்லை. நான் பல பேருக்கு விலை நிலவரங்களை சொல்லி வருகிறேன். அது மட்டுமல்லாமல் கூடுதலான விலைக்கு எடுத்து செல்ல நிர்பந்திக்கிறேன்.

வியாபாரி சொன்ன விலைக்கு விற்ற காலம் போய் எனது தேங்காய்க்கு கூடுதலாக விலை கிடைக்கிறது. காய் ஒன்றிற்கு குறைந்தது 50 பைசா முதல் 1 ரூபாய் வரை கூடுதலாக கிடைக்கிறது கண்டிப்பாக எனது வருமானம் கூடுயிருக்கிறது.

விவசாய கருத்தரங்குகளில் விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் மூலம் இதன் பயனை அனைத்து விவசாயிகளுக்கும் எடுத்துச் செல்ல முடியும். இது போன்ற சேவையை இதற்கு முன் நான் பயன்படுத்தியது இல்லை.கண்டிப்பாக செய்தி தமிழில் இருந்தால் அனைவரும் பயன்படுத்த வசதியாக இருக்கும். காய்கறி விபரம் மட்டுமல்லாமல் நெல், உளுந்து, எண்ணெய் வித்துப்பயிர்களின் விலை நிலவரங்களை எங்களுக்கு தந்தால் மிகவும் உதவியாக இருக்கும்.எனக்கு ஆங்கிலத்தில் சந்தை நிலவரம் வருவது பற்றி பிரச்சனை இல்லை. ஆனால் என்னை சார்ந்த சாதாரன விவசாயிகளால் புரிந்து கொள்வது மிகவும் சிரமமாக இருக்கும். எனவே தமிழில் இருந்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எனக்கு தெரிந்த விவசாயிகளை இந்த திட்டத்தில் ஈடுபடுத்தி வருகிறேன். அனைத்து காய்கறி மற்றும் பூக்களை சேர்த்துவிட்டதால் எங்கள் பகுதிக்கு போதுமானது. மேற்கொண்டு சேர்க்க வேறு எந்த காய்கறியுமில்லை.

நோக்கியா செல் மூலம் இது போன்ற சேவையை எனது அருகில் உள்ள விவசாயிகள் மாதம் 30 ரூபாய் பணம் கட்டி பெற்று வருகிறார்கள்.எனக்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இலவச சேவையாக அளிப்பது பெருமையளிக்கிறது. தொடர்ந்து இது போன்ற நல்ல சேவைகளை அளிக்க வேண்டும் என்று விவசாயிகள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு.கு.இளஞ்செழியன்,

த.பெ. குஞ்சிதாபாதம்,

தெற்கு தெரு, கொக்கூர்,

குத்தாலம் தாலுக்கா, நாகை மாவட்டம்.

அலைபேசி: 9791969466